
பேப் ரூத் மற்றும் ஐஸ் கிரீம் வண்டி

கதை : டான் கட்மேன்

ஓவியம் : எல்லெய்ன் கார்வின்



பேப் ரூத் மற்றும் ஐஸ் கிரீம் வண்டி




கதை : டான் கட்மேன்

ஓவியம் : எல்லெய்ன் கார்வின்

தமிழில் : அருண்குமார் ஆண்டவன்

பேப் ரூத் மற்றும் ஐஸ் கிரீம் வண்டி

கதை : டான் கட்மேன்
ஓவியம் : எல்லெய்ன் கார்வின்




படார்!

பேஸ்பால் ஜன்னலின் ஊடாக மோதி,

பெண்மணியின் சமையலறை பாத்திரம் கழுவும்

தொட்டியில் விழுந்தது.








“உங்களில் யார் இதைச் செய்தது” என அந்தப் பெண்மணி கூச்சலிட்டாள்.

“நான் காவல்துறை அதிகாரியை அழைப்பேன்!"

“ஓடுங்கள்!” என ஏழு வயதான ஜார்ஜ் ரூத் கத்திக்கொண்டே ஓடினான் .

குழந்தைகள் எல்லா திசைகளிலும் சிதறி ஓடினர்.






ஜார்ஜ் அதிவேகமாக அங்கிருந்து ஓடிவிட்டான்.


அவன் பந்தை வேண்டுமென்றே அவ்வளவு தூரம் அடிக்கவில்லை. ஆனால் அவனால் பால்டிமோரில் உள்ள மற்ற குழந்தைகளைவிட பலமாக பந்தை அடிக்கவும், வேகமாக ஓடவும் முடியும். அவன் பேஸ்பால் விளையாடுவதை விரும்பினான்.





ஜார்ஜ் ஐஸ்கிரீம் வண்டியை,

வேகமாக கடந்து ஓடினான்.





அவன் ஐஸ்கிரீம் வாங்க விரும்பினான்.

ஆனால் ஐஸ்கிரீமின் விலை ஒரு நிக்கல். (அமெரிக்க ஐந்து செண்ட் நாணயம்) ஆக இருந்தது. அவனிடம் பணம் இல்லை.

இறுதியாக ஜார்ஜ் தனது தந்தை நடத்தும் மதுவிடுதியை அடைந்தான்.

“அப்பா! மதிய உணவு என்ன இருக்கிறது?” என்று கேட்டுக்கொண்டே ஜார்ஜ் தனது தந்தையைத் தேடினான், ஆனால் விடுதி காலியாக இருந்தது.





சட்டென்று ஜார்ஜ் கவுண்டரில் ஒன்றைக்

கண்டுபிடித்தான்.

ஒரு டாலர் நோட்டு.

முழுமையான ஒரு டாலர் நோட்டு அது.






ஜார்ஜ் டாலர் நோட்டைப் பார்த்தான்.


அவன் அதை அங்கேயே விட்டுச் சென்றால், அது

பறந்து போய்விடும் அல்லது யாரோ ஒருவர் அதை

எடுத்துக் கொள்ளக் கூடும்.

எனவே ஜார்ஜ் அதை எடுத்துக் கொண்டான்.





மற்ற குழந்தைகள் ஐஸ்கிரீம்
வண்டிக்கு அருகில் தெருவில்
விளையாடிக் கொண்டிருப்பதை
அவன் பார்த்தான்.

“நீ நம்மிடமிருந்த ஒரேயொரு பந்தையும் தொலைத்துவிட்டாய் ஜார்ஜ்!” என்று அவர்கள் குற்றம் சாட்டினர்.

“மன்னித்துவிடுங்கள்!” என்று ஜார்ஜ் கூறினான்.

அவன் மிகவும் வருத்தப்பட்டான்.




அவனது கால்சட்டைப் பையில் இருந்த டாலர் நோட்டை ஜார்ஜ் தடவிப்பார்த்தான்.

ஒருவேளை அவனது தந்தை இந்தச் சிறிய ஒரு டாலரை இழந்தது குறித்து வருத்தப்படமாட்டார்.

“உனக்கு ஐஸ்கிரீம் வேண்டுமா மகனே” என வியாபாரி கேட்டார்.

“இல்லை”, “ஐஸ்கிரீம் எங்கள் எல்லோருக்கும் வேண்டும்” என்றான் ஜார்ஜ்.



தெருவில் இருந்த அனைத்து குழந்தைகளின் ஐஸ்கிரீமிற்கான பணமாக ஜார்ஜ் ஒரு டாலரை அந்த வியாபாரியிடம் கொடுத்தான்.

" ஹய்யா!“ என்று குழந்தைகள் ஆரவாரமிட்டு, ஜார்ஜின் முதுகைத் தட்டிக்கொடுத்தனர்.

“நன்றி , ஜார்ஜ் !” என்று அவனிடம் கூறினர்.

குழந்தைகள் கையில் எந்தப் பணமும் இருப்பதில்லை. அவர்களுக்கு ஐஸ்கிரீம் எப்போதாவது அரிதாகத்தான் கிடைக்கும்.



ஜார்ஜ் வீடு சென்றபோது, அவனது பெற்றோர்கள் அவனுக்காக காத்திருந்தனர்.


“ஜார்ஜ், ஒரு டாலர் பணத்தை நீ எடுத்தாயா?” என்று அவனது அப்பா அவனிடம் கேட்டார்.

“ஆமாம்” என்று அவன் சொன்னான்.

ஜார்ஜ் பொய் சொல்வதை விரும்புவதில்லை.

அவனுடைய அப்பா தன்னுடைய சிறு துடுப்பை எடுத்து வருவதற்காக கீழே நிலவறைக்குச் சென்றார்.






“ஏன் இதைச் செய்தாய் ஜார்ஜ்” என்று அவன் அம்மா அவனிடம் கேட்டாள்.

“குழந்தைகளை எனது நண்பர்களாக்க விரும்பினேன்” என்றான் ஜார்ஜ்.


“அவர்கள் என்னை விரும்ப ஆசைப்பட்டேன்.”






திருமதி. ரூத் பெருமூச்சுவிட்டாள். “எல்லோரும் உன்னை நேசிக்கிறார்கள் ஜார்ஜ். உன்னை அவர்கள் விரும்புவதற்காக நீ ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்தால், அவர்கள் உன்னை விரும்புகிறார்களா அல்லது ஐஸ்கிரீமை விரும்புகிறார்களா என்று உனக்குத் தெரியாமலே போகும்.”

“பணத்தைத் திருடுவது தவறானது, ஜார்ஜ். பணம் சம்பாதிக்க அப்பா கடுமையாக உழைக்கிறார். அதன்மூலம்தான் நாம் நமது உணவையும் மற்ற பொருட்தேவைகளையும் பெறுகிறோம்.”






“நான் என்னை மாற்றிக்கொள்ள முயற்சிசெய்கிறேன் அம்மா”, என்று ஜார்ஜ் அழுதான்.

தன் மகன் உண்மையாகவே அதைச் சொல்கிறான் என்று திருமதி. ரூத்திற்குத் தெரிந்தது.

அவன் நல்ல பையன், ஆனால் நல்ல பிள்ளைகள்தான் சிலநேரங்களில் தவறான விஷயங்களையும் செய்கிறார்கள்.





திரு. ரூத் கீழ்த்தளத்திலிருந்து படியேறி

மேலே வந்தார்.

அவர் கோபமாக இருந்தார்.

அடுத்து என்ன

நடக்கப்போகிறது

என ஜார்ஜுக்குத்


தெரிந்தது.





அவனது அப்பா அவனை பிடிப்பதற்கு முன்,

அவன் முன்வாசல் வழியாக வெளியே ஓடினான்!



“இங்கே வா, ஜார்ஜ்!” என்று அவனது அப்பா கத்தினார்.

திருமதி. ரூத் தனது மகன் என்னவாகப் போகிறான் என்று வருத்தத்துடன் பார்த்தாள்.

பெரியவனாக வளர்ந்த பிறகு, ஜார்ஜ் “பேப்” ரூத் வரலாற்றில் மிகப் பிரபலமான பேஸ்பால் விளையாட்டு வீரராக ஆனார். அவர் மிகவும் தாராளமான மனிதர், ஆனால் சில சமயங்களில் சிந்திக்காமலே விஷயங்களை செய்துவிடுவார்.

பேப் ரூத் வாழ்க்கையின் முக்கியமான காலகட்டங்கள்:

1895 பால்டிமோரில், பிப்ரவரி 6 ல் பிறந்தார்.

1902 (இந்தக் கதை நடைபெற்ற ஆண்டு). ஜூன் 13 அன்று ஜார்ஜின் பெற்றோர், பால்டிமோரில் இருந்த புனித மேரி ஆண்கள் தொழிற்பள்ளிக்கு அவரை அனுப்புகிறார்கள்; அதன் பிறகான தனது குழந்தைப் பருவம் முழுவதையும் அவர் அங்கு கழிக்கிறார்.

1914 பால்டிமோர் ஓரியோல்ஸ் எனும், இளையவருக்கான லீக் குழுவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டார். ‘பேப்’ எனும் வாழ்நாள் முழுக்க நீடித்த செல்லப்பெயரை பெற்றார். அதற்கடுத்த ஆண்டில் பேப் ரூத் பாஸ்டன் ரெட் சாக்ஸூக்கு விற்கப்பட்டார்.

1915 ரெட் சாக் ஸுடன் பெற்ற மூன்று தொடர் வெற்றிகளில் முதலாவதாக ரெட் சாக்ஸ் குழுவை வோர்ல்ட் விக்டரி சீரிஸுக்கு தலைமையேற்று வென்றார். .

1920 நியூயார்க் யாங்கீஸ் குழுவிற்கு விற்கப்பட்டார்; 0.376 சராசரி மற்று 54 ஹோம் ரன்களுடன் முழுநேர மட்டைவீசுநராக ஆனார்.

1923 யாங்கீ மைதானம், “த ஹவுஸ் தட் ரூத் பில்ட்“ திறக்கப்பட்டது; யாங்கீஸ் குழு உலகத் தொடரை வென்றது.

1927 60 ஹோம் ரன்கள் அடித்தார், 1961 வரை முறியடிக்கப்படாத சாதனையை நிகழ்த்தினார்; யாங்கீஸ் குழு உலகத் தொடரை வென்றது.

1935 .0342 சராசரி வாழ்நாள் மட்டையடி, பிட்சராக 94 வெற்றிகளுடன், 714 ஹோம் ரன்களுடன் பேஸ் பாலில் இருந்து ஓய்வுபெற்றார்.

1936 தேசிய பேஸ்பால் ஹால் ஆப் ஃபேமிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து வீரர்களில் ஒருவராக இருந்தார்.

1948 53 வயதில், ஆகஸ்ட் 16 ல் மறைந்தார்.